10–2–1983 .. (வியாழக்கிழமை)	காலை—தனியார் அலுவல்கள் மாலை—அரசினர் சட்ட முன் வடிவுகள் ஆய்வு செய்தலும் நிறை வற்றலும்
11–2–1983 .. (வெள்ளிக்கிழமை) 12–2–1983 (சனிக்கிழமை)	அரசினர் சட்ட முன் வடிவுகள். ஆய்வு செய்தலும் நிறைவேற்றலும்.

பேரவை வழக்கம் போல் காலை 9.00 மணிக்குக் கூடும்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று 5-2-1983 காலை 9.00 மணிக்கு மீண்டும் கூடும்.

பின்னர் பேரவைபிற்பகல் 1.29 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

10. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

132. தமிழ்நாடு 1940 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து 18.10.1982 ஆம் தேதியிடப்பட்ட உள்துறையின் 2590–ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (1939–ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1939) 133 (3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

133. தமிழ்நாடு 1957 ஆம் ஆண்டு திரைப்பட முறைப் படுத்துதல் விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து 27.9.1982–ஆம் தேதியிடப்பெற்ற உள்துறையின் 2474-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1955 ஆம் ஆண்டு திரைப்பட (முறைப்படுத்துதல்) சட்டத்தின் தமிழ்நாடு சட்டம் (9) 1955/10 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

134. தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தின் 1981-ஆம் ஆண்டிற்கான ஆறாவது ஆண்டறிக்கை (தமிழ், ஆங்கிலம்) [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் மத்தியச் சட்டம் 1/1951) 619–அ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பற்றது]

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

17. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1982–83 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை குறித்தும் 1981-82 ஆம் ஆண்டிற்கான துணை நிதிநிலை அறிக்கை குறித்தும் விவாதத்தைத் தொடங்கி வைத்து மின்துறை அமைச்சர் மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் அவர்கள் ஆற்றும் திருத்திய உரை (தமிழ்) ஆங்கிலம்)

18. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1981–82 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தின் போது சட்டமன்ற உறுப்பினர்கள் வழங்கிய கருத்துரைகளும் அக் கருத்துக்கள் மீதான குறிப்புரைகளும் அடங்கிய, திருத்திய விவர அறிக்கை (தமிழ், ஆங்கிலம்)

19, இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1976-77 மற்றும் 1977–78-ஆம் ஆண்டுகளுக்கான (வணிகத்துறைகள் பற்றிய) பொது நிறுவனங்கள் குழுவின் இருபதாவது அறிக்கை. (தமிழ் ஆங்கிலம்)

20. 1976–77 ஆம் ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் (வணிகத் துறைகள் பற்றிய) அறிக்கையில் சதர்ன் பிரிக் ஒர்க்ஸ் லிமிடெட் குறித்த 3.01 முதல் 3.05 ஆம் பத்திகள் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் இருபத்தி ஒன்றாம் அறிக்கை (தமிழ் ஆங்கிலம்)

21. 1972-73 ஆம் ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் (வணிகம்) அறிக்கையில் கண்ட தமிழ்நாடு மின்சார வாரியம் தொடர்பான குறிப்புரைகளின் மீது பொது நிறுவனங்கள் குழு (1977–79) அளித்த ஒன்பதாவது அறிக்கையில் அடங்கியுள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத்த நடவடிக்கை பற்றிய பொது நிறுவனங்கள் குழுவின் இருபத்தி இரண்டாம் அறிக்கை.

22. 1973-74 ஆம் ஆண்டிற்கான வாக்களிக்கப் பெற்ற மானியங்களுக்கும், சாட்டப்பெற்ற நிதி ஒதுக்கீடுகளுக்கும் மிகையாகச் செலவழித்த தொகைகள் பற்றி குழுவின் (1977-79) ஆறாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகள் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய பொதுக் கணக்கிக் குழுவின் பதினேழாவது (ஏழாவது சட்ட மன்றப் பேரவை) அறிக்கை (தமிழ், ஆங்கிலம்

இணைப்பு.

[78ம் ....பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க] !

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே

அவை முன் வைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு மின்வாரியத்தின் 1982–83 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையையும் 1981-82 ஆம் ஆண்டு துணை நிதிநிலை அறிக்கையையும் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று நான் முன் மொழிகிறேன்.

2. தமிழ்நாடு மின்வாரியம், தமிழ்நாடு மின்சார ஆலோசனைக் குழுவின் ஒப்புதலுடன், இந்த நிதிநிலை அறிக்கைகளை 1948 ஆம் ஆண்டு மின்சக்தி (வழங்கல்) சட்டத்தின் 61-ஆம் பிரிவிற்கேற்ப அனுப்பி வைத்துள்ளது. மின்வாரியம் செயல் படுவது குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவிக்கும் கருத்துக்களை அரசும், வாரியமும் கருத்தில் கொள்ளும். கடந்த ஆண்டு நடைபெற்ற விவாதத்தின்போது மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துக்கள் மீது வாரியம் என்ன நடவடிக்கை எடுத்துள்ளது என்பதை விளக்கும் அறிக்கை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு தனியே அனுப்பப்பட்டுள்ளது.

LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்